பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 25 வெள்ளிக்கிழமை (09-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 174

# கரடிப்போக்குச் சந்தி வரை படை நகர்ந்ததாக அறிவிப்பு

## 30 அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியது

கொழும்பு, ஒக 9

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 30 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

ஆதரவாக 118 உறுப்பினர்களும், எதிராக 88 உறுப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏராளமான கண்ணிவெடிகளை புலிகள் புதைத்து வைத்துள்ளனராம்

கொழும்பு, ஓகஸ்ட் 9

ஆனையிறவில் இருந்து கடந்த 26 ஆம் திகதி "உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த ஸ்ரீலங்காப் படைகள் நேற்று பதின்மூன்றாவது நாள் கிளிநொச்சி நகருக்கு அண்மையில் உள்ள கரடிப்போக்குச் சந்திவரை முன்னேறியிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னேறும் படையினரைச் சின்னா பின்னப்படுத்துவதற்காகவும் போர் டாங்கிகளை அழிப்பதற்காகவும் அப்பகுதியில் விடுதலைப் புலிகள் ஏராளமான கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

கிளிநொச்சி நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை—கரடிப் போக்குச் சந்தி வரை — படைகள் முன்னேறியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சி நடவடிக்கைகள் தொடர்பாக பிரிகேடியர் முனசிங்க மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

★ புலிகள் புதைத்து வைத்துள்ள ஏராளமான கண்ணிவெடிகளை அகற்றிக்கொண்டு படையினர் அவதானமாக முன்னேறுகின்றார்கள்:

★ படையினர் தரப்பில் இதுவரை மூன்று அதிகாரிகள் உட்பட 42 பேர் உயிரிழந்துள்ளனர்; 67 பேர் காயமடைந்துள்ளனர்.

★ இச்சண்டையில் புலிகள் தரப்பில் முன்னூறு பேர் வரை உயிரிழந்திருப்பதாக இராணுவம் மதிப்பிட்டுள்ளது.

★ ஆனையிறவில் இருந்து இதுவரை எட்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு படைகள் முன்னேறியிருக்கின்றன.

★ கடந்த சில நாள்களில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கவை. முறிகண்டியிலும் இரணைமடுப் பகுதியிலும் புலிகளின் முகாம்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலர் காடுகளுக்குள் சிக்குண்டிருக்கலாம்

### தொண்டர்நிறுவன பிரதிநிதிகவலை

கொழும்பு, ஒக. 9

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இரண்டரை லட்சம் மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்திருக்கலாம் என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் அஞ்சுகின்றன.

அதேபோல அவர்களில் பெரும் பகுதியினர் காடுகளில் சிக்குண்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

கிளிநொச்சி நோக்கிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி ஐந்து ஆறு நாள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு

### இரவு நேரங்களில் வீதித்தடை

கொழும்பு, ஒக. 9

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகரின் நுழைவாயில்களான கோட்டை முனை, கோவிந்தன் வீதி, புதியபாலம், சுமைதாங்கிப்பாலம் ஆகியவற்றில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோவிந்தன் வீதி, புதிய பாலத்தின் ஊடாக மாலை 6மணிக்கு பின்னர் பிரயாணம் செய்யதடை விதிக்கப்பட்டுள்ளது.

லேக் வீதியூடாக இரவு 7. 30 மணிக்குப் பின்னர் பிரயாணம் செய்யமுடியாது.

கடந்த செவ்வாய் காலை 10. 30 மணிமுதல் மட்டக்களப்பு நகர சந்தை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (இ-3)

## செயலிழந்த நிலையில் தொண்டர் நிறுவனங்கள்

### கிளிநொச்சியில் நிவாரணப்பணி பாதிப்பு

கொழும்பு, ஒக. 9

கிளிநொச்சியில் இயங்கி வந்த அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் சீர்குலைந்து இருப்பதனால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணப் பணிகள் எதனையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாக வவுனியாவுக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் வசித்த அனைத்து மக்களும் இடம் பெயர்ந்ததையடுத்து தொண்டர் நிறுவனங்களும் அலுவலகங்களை மூடிவிட்டுச் சென்றுள்ளன.

அகதிகளுக்கு அரசாங்கம் உணவு நிவாரணம் வழங்கினாலன்றி இன்றைய நிலைமையில் வேறு உதவிகள் கிடைப்பதற்குச் சாத்தியம் இல்லை என அதிகாரிகள் கூறுகின்றனர். [இ-3]

## கிளைமோர் தாக்குதலில் இரு பொலீஸார் காயம்

கொழும்பு, ஒக. 9

நேற்று மாலை 6-45 மணியளவில் மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற "கிளைமோர்" தாக்குதலில் இரு பொலீஸார் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள 'ரெலிக்கொம்' நிறுவனத்தில் காவல் கடமையை முடித்துக்கொண்டு மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்கு இவர்கள் திரும்பிக் கொண்டிருந்த சமயமே இத்தாக்குதலுக்கு இலக்கானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த பொலீஸார் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## நாடாளுமன்ற குழுக் கூட்டங்களில் ஜனாதிபதி கலந்து கொள்ளாததுஏன்?

### ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி

கொழும்பு, ஒக. 9

அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும்பாலும் கலந்துகொள்வதில்லை.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சுபைர் ஆகியோர் இது தொடர்பாக தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை.

டக்ளஸ் தேவானந்தா அங்கு உரையாற்றுகையில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் ஆலோசிக்கும் முகமாகவே அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறோம்.

ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் சமுகமளிக்காதிருக்கும் போது எமது குறைகளை அவரிடம் எப்படித் தெரிவிக்க முடியும் என்று கேட்டார்.

## பெண் தற்கொலையாளி கொழும்புக்குள் ஊடுருவல்?

### தேடுதலில் 7 நபர்கள் கைது

விடுதலைப் புலிகளின் பெண் தற்கொலைப் படை உறுப்பினர் ஒருவர் கொழும்பு நகருக்குள் ஊடுருவி உள்ளார் என வெளியான செய்தியை அடுத்து நேற்று முன்தினம் இரவு கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் பொலீஸார் தேடுதல் நடத்தினர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பிராந்திய பொலீஸ் மா அதிபர் எக்கநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ரஞ்சினிதேவி அல்லது ரஞ்சனி பத்மினி என்றழைக்கப்படும் நடராஜா பத்மினி என்ற தற்கொலைப்படை உறுப்பினரை பொலீஸார் இன்னமும் தேடி வருகின்றனர் என்றும் —

இந்தச் சந்தேக நபரின் புகைப்படம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது. (இ-3)

# சொத்தி உபாலி சந்திரிகாவுடனும் மிக நெருங்கிய உறவு வைத்திருந்தார்

## கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவிப்பு

பாதாள உலகத் தலைவர்களில் ஒருவர் எனக் கூறப்படும் சொத்தி உபாலி 1980 களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு மிக நெருங்கியவர்களில் ஒருவராக இருந்தார் என்ற தகவல் இப்போது வெளிவந்திருக்கிறது.

இது சம்பந்தமான ஆதாரங்களுடன் ''த சண்டே லீடர்'' பத்திரிகை கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அரம்பவலகே டொன் உபாலி ரஞ்சித் என்ற பெயருடைய சொத்தி உபாலியை- காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும், வேறு ஒவ்வாத வேலைகளுக்கும் பயன்படுத்தி வந்தார் என்ற தகவல்கள் முன்னர் வெளிவந்தன.

இப்போதைய அரசு நியமித்துள்ள ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் சிலவற்றின் முன்னும் பாதாள உலகச் செயற்பாடு குறித்து தகவல்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழுக்கள் குறித்து மக்கள் மத்தியில் கூடாத அபிப்பிராயம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில்—

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சொத்தி உபாலியுடன் இருந்த தொடர்புகள் குறித்து இப்போது தகவல் கிடைத்துள்ளதாக அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ 1980 ஆம் ஆண்டில் சொத்தி உபாலி மோட்டார் வாகனம் ஒன்றை வாங்குவதற்கு ''றாப்பி பினான்ஸ் கொம்பனி'' என்ற நிதி நிறுவனத்திடம் கடன் பெற்றிருந்தார்.

அவரது கடன் விண்ணப்பத்தில் சந்திரிகா குமாரதுங்கவே பிணையாளியாகக் கையொப்பம் இட்டார்.

ஆனால் கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான தவணைப் பணத்தை உபாலி செலுத்தவில்லை.

இதனை நிதிநிறுவன உத்தியோகத்தர் ஒருவர் சந்திரிகாவின் வீட்டுக்கு நேரில் சென்று கூறியபோது—

உபாலி அப்படிச் செய்ய மாட்டாரே, விரைவில் தவணைப் பணத்தைச் செலுத்துவார் என்று சந்திரிகா கூறினாராம்.

ஆனால் வாகனத்தை வாங்குவதற்குப் பெறப்பட்ட கடன் இன்னமும் திரும்பச் செலுத்தப்படவில்லை.

★ சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி வேலை செய்து வந்த நேரத்தில் விஜயகுமாரதுங்கா, சந்திரிகா குமாரதுங்கா ஆகியோர் உபாலியுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தனர்.

★ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சந்திரிகாவுக்கும் அனுராவுக்கும் போட்டி நிலவிய காலத்தில்—

சந்திரிகாவின் சிபார்சின் பேரில் சொத்தி உபாலியின் சகோதரர் இந்திரேயை திருமதி பண்டாரநாயக்கா, கட்சியின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமித்தார்.

சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்காவுக்கும், ஆர். பிரேமதாசாவுக்கும் இடையில் அரசியல் ரீதியாக நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது.

இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் முன்னாள் அமைச்சர் சிறி சேனாகூரேயிடம் உண்டாம்.

★ சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக வேலை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விஜயகுமாரதுங்கா, சந்திரிகா ஆகியோருக்குப் பணம் வழங்கியிருக்கிறது.

இப்போதைய பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்காவும் சொத்தி உபாலியின் உறவினர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறார்.

★ சொத்தி உபாலியின் நெருங்கிய நண்பர் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் சிறி சேனா கூரேயுடன் ஜனாதிபதி சந்திரிகா இவ்வருடம் ஜனவரி மாதம் அலரி மாளிகையில் வைத்து உரையாடியிருக்கின்றார்.

— என்ற பல புதிய தகவல்களும் அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)


## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**G. C. E. "O" LEVEL**
**G. C. E. "A" LEVEL**

மாணவர்களுக்குரிய

**ENGLISH LITERATURE CLASSES**

★ ஆண்டு 9, 10 இல் இலக்கியம் கற்போரும் சேர்ந்து பயிலலாம்.

ஆசிரியர் :- த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்:- 11 - 08 - 96 பி. ப. 2-00 மணி

மேலதிக விவரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்க.

(42187)



## வைத்திய நிலையம்

ஆனைக்கோட்டையிலும் பின்னர் சாவகச்சேரியிலும் இயங்கி வந்த வைத்திய நிலையம் தற்போது மானிப்பாய் வர்த்தகத் திணைக்களத்திற்கு அருகே காலை 8. 00 மணி தொடக்கம் பி. ப. 2 00 மணி வரை இயங்கிவருன்றது.

காலை 6. 00 மணி முதல் - 7. 30 மணி வரையும்
மாலை 4. 00 மணி முதல் - 6. 00 மணி வரையும்
இல. 55, யா/இந்துக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் சிகிச்சையளிக்கப்படுகிறது.

தேவை

1. உதவி வைத்திய அதிகாரி (R. M. P.)
2. மருந்துக் கலவையாளர் (Dispenser)

Dr. எஸ். சிவானந்தராஜா
M. B. B. S. (Cey)

(42184)


## மரண அறிவித்தல்

திருமதி
### பரமேஸ்வரி அம்பலவாணர்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் அம்பலவாணரின் அருமை மனைவி பரமேஸ்வரி 8-8-96 காலை காலமானார்.

இவர் தவநாயகி (அதிபர், கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வி. காரைநகர்), தவபாலன் (கணக்காளர் கொழும்பு), சாந்தகுமாரி (சட்டத்தரணி) ஆகியோரின் அருமைத் தாயாரும், பாலசிங்கம் (மக்கள் வங்கி), தேவகி (கணக்காளர் கொழும்பு), சிவபாதம் (இலங்கை வங்கி) ஆகியோரின் மாமியாரும் ஜனகன், ரூபன், தர்ஷிகா, தர்ஷன், தனுஜா ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் நடைபெறும்.

தகவல்:
திருமதி தவநாயகி பாலசிங்கம்

களபூமி,
காரைநகர்.

[42180]


**New Science Hall**
&
**New Science Academy**

முக்கிய
அறிவித்தல்

**A/L 98**

10 - 8 - 96 சனிக்கிழமை நடைபெறமாட்டாது;
11 8 96 ஞாயிறு வழமைபோல் நடைபெறும்.

— நிர்வாகி

(42188)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

சித்த மருத்துவத் துறை

சித்த மருத்துவத் துறை மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 12-08-96 (திங்கட்கிழமை) மு. ப. 10.30 மணிக்கு சித்த மருத்துவத் துறைக்குச் சமுகமளிக்கும்படி சித்த மருத்துவத் துறைத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

பதிவாளர்.

(C/2739)

# மரண அறிவித்தல்கள்

## நடேசன் சிவபாக்கியம்

அரியாலை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த நடேசன் சிவபாக்கியம் 07 - 08 - 96 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நடேசனின் அன்பு மனைவியும், ஆனந்தமூர்த்தி, ஆனந்தஈஸ்வரி, ஆனந்தராணி, ஆனந்தசிவம், ஆனந்தராசா, சந்திரிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், கீத்தா, கணேசமூர்த்தி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, விபிஸ்னா, துஷ்யந்தி, பிரதீபன் கோகிலப்பிரியா, கஜயந்தி, விதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09 - 08 - 96 இன்று 2-00 மணிக்கு சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. ஆனந்தசிவம்
(மகன்)

நெடுங்குளம் வீதி,
அரியாலை.

(42186)

## பொன்னையா சுப்பையா

(ஓவசியர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மாரீசன்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுப்பையா (ஓவசியர்) 07 - 08 - 96 இல் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரன், சாந்தகுமாரன், ராஜகுமாரன் (Holland), கௌரி (லங்கா சிமெந்து லிமிட்டெட், கொழும்பு), சந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி திலகவதி (ஆசிரியை, மகளிர் கல்லூரி சாவகச்சேரி), திருமதி தெய்வநாயகி (மோட்டார் போக்குவரத்து திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), அமரசிங்கம் (S. T) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனனி, சாரங்கன், விதுனன், ஆசாயினி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் 08 - 08 - 96 இல் மாரீசன்கூடல் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சாந்தகுமாரன்
(மகன்)

(42185)

## ஆறுமுகம் டேவிட்போல்

[ஓய்வுபெற்ற அதிபர் வதிரி. மெ.மி. த.க பாடசாலை]

வதிரியைப் பிறப்பிடமாகவும், கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் டேவிட்போல் 07 - 08 - 96 அன்று நள்ளிரவு 12.00 மணியளவில் கர்த்தருக்குள் மகிமைப்படுத்தப்பட்டார்.

அன்னார் திருமதி சந்தனவடிவு [இளைப்பாறிய ஆசிரியை] அவர்களின் பாசமிகு கணவரும், கொழும்பு அன்பழகன்போல் [கணக்காளர்], திருமதி றஞ்சிதம் குட்டித்தம்பி [அதிபர் யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புமிகு தந்தையும், திருமதி ரஞ்சினி, திரு. ம. குட்டித்தம்பி [அதிபர்,/யா தேவரையாளி இந்துக் கல்லூரி] ஆகியோரின் மாமனாரும், ஜேசன், ஜோயல் ஆகியோரின் பேரனும், நைல்ஸ் [இளைப்பாறிய ஆசிரியர்], றோசம்மா, காலஞ்சென்ற ஞானம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி
[மகள்]

''கிருபை''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

[42173]

## சூரியர் சிதம்பரப்பிள்ளை

துன்னாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய பயணச்சீட்டுப் பரிசோதகர் (இலங்கை போக்குவரத்துச் சபை) சூரியர் சிதம்பரப்பிள்ளை 03- 08- 1996 (சனிக்கிழமை) அன்று சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூரியர் -முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் செல்வமோகன் (ஜேர்மனி), மதன்மோகன் (பொறுப்பதிகாரி, மதுவரித்திணைக்களம்—மன்னார்), மதிவதனி (ஆசிரியை, குடத்தனை அ. த. க. பாடசாலை), வசந்தகுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிமளத்தின் அன்புச் சகோதரரும், மகேந்திரசிங்கத்தின் (ஆசிரியர், கைதடி நவீல்ட் பாடசாலை) அன்பு மைத்துனரும், மாலினி, கோபிநாத் (ஆசிரியர், குடத்தனை அ த. க. பாடசாலை), விக்கிரமசிங்கம், ரஞ்சிதமலர், தேவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிந்தன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 06- 08- 96 செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெற்றன.

தகவல்:-
கே. ஏ. எஸ். கோபிநாத்
( மருமகன் )

சங்கக்கடை ஒழுங்கை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(42182)

# குறோஸ்னியின் ஒரு பகுதி கிளர்ச்சிக்காரர்கள் வசம்

## செச்சின்ய யுத்தத்தில் புதிய திருப்பம்

குறொஸ்னி, ஒக. 9

செச்சின்ய பிரிவினை வாதிகள் தலைநகர் குறொஸ்னி மீது நடத்திய திடீர் தாக்குதலை அடுத்து குறொஸ்னியின் ஒரு பகுதி கிளர்ச்சிக்காரர்களிடம் வீழ்ச்சி அடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறொஸ்னியில் கடும் சண்டை நடந்து கொண்டிருப்பதாகவும் — விமான நிலையத்துக்கான பிரதான பாதை மற்றும் முக்கிய அரச கட்டடங்கள் பிரிவினைவாதிகளின் கையில் சிக்கி இருப்பதாகவும் குறொஸ்னியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தவிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

குறொஸ்னியில் பதினொரு அலுவலகக் கிளைகளை செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு கொண்டுள்ளது.

குறொஸ்னியில் கடும் சண்டை மூண்டதை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அமைந்துள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

ரஷ்யாவின் பிராந்தியங்களில் செச்சின்யாவும் ஒன்று. இங்குள்ள செச்சின்ய மக்கள் தனிநாடுகோரிப்போராடி வருகின்றனர்.

# இந்தியா - பாகிஸ்தான் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம்

## நவாப் ஷெரீப் யோசனை

இந்தியாவும், பாகிஸ்தானும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவர் நவாப்ஷெரீப் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இந்த நட்புறவுஒப்பந்தத்தை மேற்கொள்ள இருநாடுகளும் முன்வர வேண்டும்என்றும்— இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலப்பகைமை நீங்க உதவும் என்றும்—அவர் கூறியுள்ளார். (இ-3)

# பிச்சைக்காரர் போர்க்கோலம்

பாரிஸ், ஒக. 9

பிரான்ஸ் நாட்டின் மூன்று மாநகர சபைகள் பிச்சையெடுப்பதைத் தடை செய்ததை எதிர்த்து, பிச்சைக்காரர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் மாநகர சபையின் உத்தரவுக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடை விதிக்கப்பட்டது.

# மகாத்மாகாந்தியின் பேரன் தென் ஆபிரிக்கத் தூதர்

சென்னை, ஒக. 9

மகாத்மாகாந்தியின் பேரன் கோபாலகிருஷ்ணகாந்தி தென் ஆபிரிக்க நாட்டுக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவை சந்தித்த அவரை இந்தியாவின் முத்து என மண்டேலா வர்ணித்தார்.

1894 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் இயக்கத்தை ஆரம்பித்தவர் மகாத்மா காந்தி ஆவார்.

வன்முறையற்ற உண்மை வழிப்போராட்டத்தை அவர் தென் ஆபிரிக்காவில் ஆரம்பித்திருந்தார். (இ-3)

# காஷ்மீரில் 16 பேர் பலி

மணிலா, ஒக. 8

காஷ்மீர் மாநிலத்தில் தொடரும் வன்முறைச் சம்பவங்களில் நேற்று முன்தினம் மட்டும் ஆறு தீவிரவாதிகள், இராணுவத்தினர் உட்பட 16 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். (இ-5)

# அமெரிக்க செனட்டரின் காஷ்மீர் மாநில விஜயம்

## காங்கிரஸ், பாரதிய ஜனதா எதிர்ப்பு

புதுடில்லி, ஒக. 9

அமெரிக்க செனட்டர் ஹாங் பிறவுன் காஷ்மீருக்கு அரசியல் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்

இவரது விஜயத்தை காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சிகள் கடுமையாக கண்டித்துள்ளன.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் செயல் இது என்று அவை கூறியுள்ளன.

ஹாங்பிறவுன் பாகிஸ்தான் ஆதரவாளர் என்று கூறப்படுகிறது. (இ-3)

**உலக அரங்கில்**

# தமிழில் பூசை

தமிழகத்தில் உள்ள இந்து ஆலயங்களில் தமிழில் பூசை நடத்தப்பட வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு. பி. ரி. ஆர். பழனிவேல்ராஜன் கூறியிருப்பதை பல சமுதாய அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

# பங்களாதேஷ் ஜனாதிபதி தெரிவு சட்ட பூர்வமானதா?

## உயர் நீதிமன்றம் கேள்வி

டாக்கா ஒக. 9

தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படாமல் பங்களாதேஷின் ஜனாதிபதியாக சஹாபுதீன் அகமட் நியமிக்கப்பட்டது சட்டபூர்வமானதா என அந்நாட்டின் உயர்நீதிமன்றம் வினா எழுப்பியுள்ளது.

பங்களாதேஷ் தேர்தல் ஆணையாளர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் புதிய ஜனாதிபதி ஆகியோருக்கு கேள்விக் கொத்தை அனுப்பி வைத்துள்ள அந்நாட்டு உயர்நீதி மன்றம், ஜனாதிபதியாக சஹாபுதீன் அகமட் தெரிவானது தொடர்பாக அவருக்குள்ள சட்டபூர்வமான தகுதிகள் பற்றி பதிலளிக்குமாறு கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கான வேட்புமனுவை வேறு எவரும் தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த மாதம் 22 ஆம் திகதி சஹாபுதீன் அகமட் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உயர்நீதிமன்ற நீதியரசராகப் பணியாற்றிய சஹாபுதீன் அகமட் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டது அந்நாட்டு அரசியல் சட்டத்தின் எவ்வகையில் ஏற்புடையது என்பது தொடர்பாக அந்நாட்டு எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியக் கட்சி வினா எழுப்பியுள்ளது. (இ-10)

# ஹொங்கொங் கையளிக்கப்பட்ட பின் உருவாகும் பிரச்சினைபற்றி ஆராய்வு

பீஜிங், ஒக. 9

ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் உருவாகக் கூடிய பிரச்சினைகள்பற்றிகண்டிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளை சீன அரசு பணித்துள்ளது.

ஹொங்கொங் சீனாவிடம் மீண்டும் கையளிக்கப்பட்டதும் உருவாகக்கூடிய அமைதியின்மை — மற்றும் பல்வேறுவழிகளில் உருவாகக் கூடிய ஆபத்துக்கள் —

தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சீனத் தலைவர்கள் தமது அதிகாரிகளைப் பணித்துள்ளனர் என ''மின் சாயோ'' என்னும் சீன தினசரி தெரிவித்துள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளைப் போலவே ஐரோப்பிய நாடுகளால் உருவாகக் கூடிய உள்நாட்டு பிரச்சினைகள் எதிர்பார்க்கும் அளவுக்கு அதிகமாக இருக்கும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் திகதி ஹொங்கொங் சீனாவிடம் பிரிட்டனால் கையளிக்கப்படவுள்ளது. (இ-10)

# போதிய உணவு, தண்ணீர் இன்றி மர நிழல்களில் வாழும் மக்கள்

## உதவ முடியாத நிலையில் தொண்டர் நிறுவனங்கள்

வவுனியா, ஒக. 9

கிளிநொச்சியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் வெளியேறி இருந்தனர்.

கையில் அகப்பட்ட சொற்ப பொருள்களுடன் குழந்தை, குட்டிகளையும் காவிக்கொண்டு அவர்கள் கால் நடையாக 20 அல்லது 39 மைல்களைத் தாண்டினர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள், கிளிநொச்சி, முறிகண்டிப்பகுதிகளில் இருந்து பகல், இரவு என்று பாராது வெளியேறினர்.

பாம்புகள், விஷஜந்துகள், காட்டு மிருகங்கள் உள்ள பகுதிகள் ஊடாக உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் கால் போன போக்கில் இவர்கள் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துணுக்காய், கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேசங்களை நோக்கியே இவர்களில் பலரும் இடம்பெயர்கின்றனர்.

' உண்மை வெற்றி ' முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து சுமார் 50 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களும்இந்தப் பகுதிகளிலேயே தற்போது தங்கியுள்ளனர்.

முறிகண்டியில் இருந்து பிரதான வீதி வழியாக வரும் மக்கள் கொக்காவில் பகுதிக்குச் செல்கின்றனர். பின்னர் அங்கிருந்து துணுக்காய்க்கு 15 மைல் தூரம் கால் நடையாகவே செல்கின்றனர். வாகன நடமாட்டம் எதுவும் இப்பகுதியில் இல்லை.

வேறு சிலர் முறிகண்டியில் இருந்து அக்கராயன் குளம், கோட்டை கட்டின குளம் வழியாக 20 மைல் தூரம் நடந்து துணுக்காய்க்குச் செல்கின்றனர்.

பகலில் நடந்து செல்லும் இவர்கள் களைப்படைந்து சோர்வடைந்த நிலையில் இரவு நேரங்களில் வீதியின் இரு மருங்கிலும் மரங்களின் கீழ்ப் படுத்துத் தூங்குகிறார்கள்.

இவர்களுக்கு குடி தண்ணீர் வழங்குமாறு ஒக்ஸ்பாம் தொண்டர் அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உடனடியாக அதற்கான வசதிகளைச் செய்ய முடியாதிருப்பதாக ஒக்ஸ்பாம் கைவிரித்து விட்டதாம்.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 60 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஐ. நா. தூதரகம் மடுவுக்கு இடம் மாற்றப்பட்டது

கொழும்பு, ஒக. 9

இராணுவ நடவடிக்கையை அடுத்து கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மடுவுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

மடுவில் இயங்கும் இந்த அமைப்பின் மடு அலுவலகத்தில் ஸ்கந்தபுரம் அலுவலகமும் இயங்கும்.

கிளிநொச்சியில் இயங்கிய மற்றும் பல சர்வதேச அமைப்புகளின் அலுவலகங்களும் மடுவுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன. (இ-3)

# மெயில் வான் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஒக 9

தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய 'மெயில்வான்' யாழ்ப்பாணம் தபாலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்த வானுடன் உள்ளூர் தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது தபால்பொதிகளை தரம் பிரிக்கும் வேலைகள் நடைபெறுவதுடன், தரம் பிரித்த தபால்கள் விநியோகிக்கப்பட்டும் வருகின்றன. (இ-15)

# விமானத் தபால் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 9

வெளியூர்த் தபால்களை விமானத்தில் எடுத்துச் செல்லும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. தபால்கள் வாகனம் மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வாரத்தில் குறைந்தது மூன்று தடவைகள் இச் சேவை நடைபெறும்.

பாரமற்ற தபால்களே இச் சேவைக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஜெனரேட்டர் 2500W, குளிர்சாதனப் பெட்டி, டீப் பிறீசர், மற்றும் கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பே. சத்தியமூர்த்தி, அமுதா குளிரகம், வல்வெட்டித்துறை. (சி- 2725)

### இடமாற்றம்

மானிப்பாயில் இயங்கிய Dr. பாலபாஸ்கரனின் வைத்தியசாலையும், எனது வைத்தியசாலையும் மாலையில் மட்டும் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில், இயங்குகின்றது. Dr.K.சிவனடியான். (42158)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி, தபால்வழி ஆரம்பமாகிறது. கடைசித் தகைமை க.பொ.த (சா/த). தற்காலிகமாக, தாமதமாகியிருந்த மாணவரும் தொடர்பு கொள்க: பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா, திரு. வி. கே. கந்தசாமி, வைரவர் கோவிலடி, "பழமுதிர்ச் சோலை", 20, அச்சக ஒழுங்கை, தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42154)

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்ளர், தண்ணீர் ரம்ளர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

### O/L DAY CLASSES

1996 DEC. பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்குரிய பகல்நேர வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. விபரங்களுக்கு யுப்பிட்டர் கல்வி நிலையம், சாவகச்சேரி. (சி/2717)

### கணிதம், ஆங்கிலம்

O/L Distinction, Credit பெறுபேறடைய, தவணைப் பரீட்சைகளில் ஆண்டு 6, 7, 8, 9, 10 மாணவர்கள் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [42172]

### தேவை

அஸ்பெஸ்ரஸ் சீலிங் சீற்றுகள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: வே. நவரத்தினம் இல. 49, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (42178)

**I.I.S.** Computer Classes
உயர் கல்வியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான விசேட கணணி வகுப்புகள்
(Turbo Prolog, C++, Turbo Pascal)
ஆரம்பம்: **10-08-1996** 10-00 a.m.
தொடர்பு:
**Institute of Informatics Studies**
68, Clock-Tower Road, Jaffna.
(42139)


# புலிகள் இயக்கத்தைத்தடைசெய்வதற்கு அனேகமான கட்சிகள் எதிர்ப்பு

## மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரிக்கிறது

கொழும்பு, ஒக. 7

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது குறித்து இருவிதமான கருத்துக்கள் நிலவுவதாக சண்டே ரைம்ஸ் ஞாயிறு வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்கத்தை தடை செய்வது குறித்து அரசாங்கம் இதுவரை உத்தியோக பூர்வ அறிக்கை எதனையும் வெளியிடவில்லை என்றும்—அப்படியான அறிவிப்பு ஏதும் வந்தால் ஐ. தே. க அது குறித்து விவாதித்து தனது கருத்தை வெளியிடும் என்றும்— ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறல தெரிவித்தார்.

மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்—உம், ஐந்து தமிழ் கட்சிகளும் புலிகள் இயக்கத்தை தடை செய்வதை எதிர்க்கின்றன என்று சண்டேரைம்ஸ் ஞாயிறு வார இதழ் தெரிவித்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ரவூ ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோக்கடிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்புகிறது. அதேசமயம் அதனை தடை செய்வது மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால் சமாதானத்துக்கான கதவுகள் மூடப்பட்டு விடும். சமாதான முயற்சிகளுக்கு இது முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்றார்.

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரா கருத்துத்தெரிவிக்கையில், புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது மூலம், அவர்கள் தற்போது உலக நாடுகளில் இருந்து பெறும் உதவிகளைத் தடுத்துவிட முடியாது என்றார்.

ரெலோ பேச்சாளர் எஸ். சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது சமாதான முயற்சிகளுக்கு நிரந்தர முடிவை ஏற்படுத்தி விடும் என்றார்.

ஈரோஸ் பேச்சாளர் எஸ். சுதாகர் கருத்துத்தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் இயக்கம் மிகவும் பலம் வாய்ந்தது என்றும், அதனைத் தடை செய்வதால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை என்றும் தெரிவித்தார். (இ)

# முன்னாள் பொலிஸ் அதிபர் அப்பீல்

ஐ. ஏ. எஸ். அதிகாரியான திருமதி ரூபன் தாயன் பஜாஜ் என்பருக்கு மானபங்கம் ஏற்படக் கூடிய விதத்தில் நடந்து கொண்டதாக சண்டிகார் நகர தலைமை மாஜிஸ்திரேட்டால் தண்டிக்கப்பட்டுள்ள பஞ்சாப்பின் முன்னாள் பொலிஸ் அதிபர் கே. பி. எஸ். கில் தமக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மாவட்ட செஷன் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப் போவதாகக்கூறியுள்ளார்.

இக்குற்றத்துக்காக இவருக்கு 5 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கிளிநொச்சி செயலகம் அக்கராயனில்

கொழும்பு, ஒக. 9

கிளிநொச்சி செயலகத்தை அக்கராயன் குளத்தில் தற்காலிகமாக இயங்க வைக்க அதிகாரிகள்நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜாவும் அக்கராயனிலேயே தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ- 3)

# யாழ். குடாநாட்டில் மருந்துக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ். குடாநாட்டில் மருந்துப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது.

நோயாளருக்குரிய மருந்துப் பொருள்கள் அரசாங்க வைத்தியசாலைகளிலும், தனியார் மருந்துக் கடைகளிலும் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சில நோய்களுக்கு கட்டாயம் உட்கொள்ளவேண்டிய குளிகைகள் மற்றும் மருந்துப் பொருள்களைப் பெறுவதற்கு நோயாளர்கள் அலைய வேண்டிய நிலை உள்ளது. (இ-5)

# அச்சுவேலி ஆஸ்பத்திரி முழு நேரமும் இயங்குகிறது

அச்சுவேலி, ஒக. 9

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை மீண்டும் இரவு-பகல் முழு நேரமும் செயற்பட்டு வருகிறது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை இடைக்காலத்தில் அரசினர் மருந்தகமாக பகல் வேளையில் மட்டும் செயற்பட்டு வந்தது.

பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டு மீண்டும் முழுநேர வைத்தியசாலையாக செயற்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 5ஆம் திகதிதொடக்கம் இரவு- பகல் முழு நேரமும் இந்த வைத்தியசாலை செயற்படுகிறது. (இ- 11)

# பாதுகாப்பு அரண்களால் இடம் பெயர்ந்தவர்கள்

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

பாதுகாப்பு அரண்கள் அமைத்ததால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தென்மாராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, சரசாலை வடக்கு, இராமாவில், கொடிகாமம் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்கப் படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் தற்போது தங்கியுள்ள பகுதி கிராம அலுவலரிடம் பங்கீட்டு அட்டையை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-117)

# படிகள், அளவை கருவிகள் முத்திரை இடும் நடவடிக்கை

நிலுவைப் படிகள் — அளவைக் கருவிகளுக்கான முத்திரையிடும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக செயலக நிலுவை — அளவைப் பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலும் முத்திரையிடப்படாத நிலுவைப் படிகளும் அளவைக்கருவிகளும் உபயோகத்தில் இருப்பதாகவும்— இதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

நிலுவை - அளவைப்பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் —

தற்போது சங்கானை உதவி அரசாங்க அதிபர்பிரிவிலும்— பண்டத்தரிப்பு குறு கூட்டுறவுச் சங்கங்களிலும் — நிலுவைப்படிகளுக்கும் - அளவைக் கருவிகளுக்கும் முத்திரையிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் செயலக நிலுவை அளவைப் பிரிவில் தனியார் வர்த்தகர்களின் படிக்கற்களுக்கும் — அளவைக் கருவிகளுக்கும் முத்திரை இடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# ஓய்வூதியர் குடும்பத்தில் ஒருவருக்கு அரச வேலை

## அமைச்சர் ஜெயக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 9

ஓய்வூதியம் பெறுபவர்களின் குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கலாசார, சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினார்.

திலியப்பிட்டியாவில் நடந்த ஓய்வூதியர் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெறும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு அவரது கல்வித் தகைமைக்கு ஏற்ப அரசாங்கத் தொழில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (இ-3)

# கோப்பாய் செயலர் பிரிவு விசேட அடையாள அட்டை

## நாளை விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம் ஒக. 9

வலி-கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு, கல்வியங்காடு இருபாலை கிழக்கு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, உரும்பராய் மேற்கு, உரும்பராய் தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் இருபாலைச் சந்திக்கு அருகாமையிலும்—

கோப்பாய் வடக்கு, உரும்பராய் வடக்கு, உரும்பராய் கிழக்கு, ஊரெழு, நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, அச்செழு, வாதரவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் மேற்குறிப்பிட்ட அதே நாளில் அதாவது நாளை சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலகத்திலும் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

அடையாளஅட்டை இடைக்கப் பெற்றவர்களின் பட்டியல் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்திய பின், குறிக்கப்பட்ட திகதியில் சென்று தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ)


**YARL HALL**
**கல்வி நிலையம்**
[ திருமறைக் கலா மன்றம் முன்பாக ]
93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**O/L 1996** மாணவர்களுக்கான
பகல் நேர, மாலை நேர
துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: **10-08-96** சனிக்கிழமை
★ ஆண்டு 6 முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
— விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
★ விசேட ஆங்கில, சிங்கள வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஆசிரியர்: திரு. T. சகாதேவன்
[42169]

உதயன்

## தாமதத் தபாற் சேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த பல வருடங்களாகச் சீரற்றுப் போய்விட்ட பல அத்தியாவசிய சேவைகளில் தபாற் சேவையும் ஒன்று.

மிக முக்கியமான, அவசரமான குடும்பத் தகவல்களைக் கூட பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பில்லை. கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் உரியவர்களைச் சென்றடைய பல நாள்கள், வாரங்கள் பிடிக்கின்றன. வெளிநாடுகளுக்கான கடிதங்கள் விலாசதாரர்களை பல மாதங்களுக்குப் பின்னரே சென்றடைகின்றன.

அதே போன்றே குடாநாட்டு மக்களுக்கு வெளியிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் மிக மிகத் தாமதமாக வந்தடைகின்றன. உறவினர்கள் பற்றிய தகவல்கள் அவர்கள் அறிவித்த— மடல் எழுதப்பட்ட— ஐந்து ஆறு மாதங்களின் பின்னரும் வந்து கிடைப்பதுண்டு!

அதன் காரணமாக முக்கிய குடும்ப அலுவல்களைச் செய்ய முடியாமல் மக்கள் தவறவிட்டதும் கஷ்டமடைந்ததும், நஷ்டம் அடைந்ததும் வழக்கமாகிவிட்டது.

அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த பின்னரும் கடந்த ஏழு மாதங்களாக— முந்திய நிலையில் எவ்வித மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்படவில்லை.

தபால் தொடர்புச் சேவைக்கு இப்போது கடல் வழி மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. நாளாந்தம் கப்பல் சேவையை நடத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. பாதுகாப்பு நிலைமையும் நிதி வசதிக்குறைவும் அதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

அதனால் அங்கிருந்து வரும் கடிதங்களும் இங்கிருந்து அனுப்பப்படும் கடிதங்களும் உரிய விலாசதாரர்களைச் சென்றடைய இப்போதும் ஆகக் குறைந்தது ஒருமாதம் செல்கிறது.

தபாலின் முக்கியத்துவத்தையும், அது உரியவரைச் சென்றடைவதில் உள்ள தாமதத்தையும்— ஆமை வேகத்தையும்— நோக்கும் போது யாழ். குடாநாட்டுக்கான தபாற் சேவை அர்த்தமற்ற ஒன்றாகிறது.

குடும்ப உறுப்பினர்களும், உற்றார் உறவினர்களும், நண்பர்களும் தமது தனிப்பட்ட தகவல்களை பரிமாறிக் கொள்வது ஓர் அடிப்படை உரிமையாகும். தபாற் சேவை சீராக நடைபெற்று, தகவல்கள் உரிய நேரத்தில் விரைவாகப் பரிமாறப்படுவதற்கு அரசு வசதி செய்யாவிடில் அது மக்களின் உரிமையை மறுப்பதாகும்; மீறுவதாகும்.

எனவே யாழ். குடாநாட்டிற்கு விரைவான தபாற் சேவையை நாளாந்தம்வழங்கி அரசு, நிலைமையைச் சீராக்க வேண்டும்.

அதனை உணர்ந்து, வாரத்தில் மூன்று நாள்கள் விமான மூலமும் தபாற்பொதிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது பொருத்தமானதாகும். மேலதிக கட்டணம் இன்றி சாதாரண கடிதங்களை எடுத்துச் செல்லும் ஒழுங்கு மக்களுக்கு பெரிதும் நன்மை பயக்கும்.

விமான மூலமான தபாற் சேவை தற்காலிக ஏற்பாடாக இருக்கக் கூடாது. அப்போது தான் நீண்ட நாள்களாக நிலவும் தகவல் தொடர்பு தாமதம் நீங்கும்.

# உண்மை நிலையை கூற அரசு தயங்குவது ஏன்?

## முல்லைத்தீவு தாக்குதல் குறித்து சபையில் கேள்வி

கொழும்பு ஒக. 9

அரசாங்கம் யுத்த காலத்தில் நடக்கும் உண்மை நிலைகளை கூற ஏன் தயங்க வேண்டும்? பொதுமக்கள் உண்மை நிலையை அறியவிரும்புகிறார்கள்.

ஐ. தே. க. அம்பாறை மாவட்ட பிரதிநிதி பி தயாரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த சமயம் எதிர்க்கட்சி சார்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்து அவர் உரை நிகழ்த்தினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம். பி யான கே. பி. ஏக்கநாயக்க பேசுகையில், முல்லைத்தீவுச் சம்பவத்துக்கு எமது அரசாங்கம் காரணம் கூற வேண்டும் என கூறும் ஐ. தே. க. அவர்களது 17 வருட ஆட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களுக்கு சபையில் எப்போதாவது விளக்கம் கொடுத்தனரா? என்று கேள்வி எழுப்பினர்.

முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட பிரதிநிதி மொஹிடீன் பேசுகையில், முல்லைத்தீவ சம்பவத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு மீண்டும் பதவிக்கு வரலாம் என ஐ. தே. க. பகற்கனவு காண்கின்றது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கஞ்சி குடிச்சாறு முகாமில் 250 பொலீசார் கொல்லப்பட்டது-

அரந்தலாவ சம்பவத்தில் பிக்குமார் கொல்லப்பட்டது-

புறக்கோட்டை, மருதானை குண்டு வெடிப்புச் சம்பவங்கள்-

லலித் அத்துலத்முதலி, ஆர். பிரேமதாஸா, காமினிதிஸநாயக்கா படுகொலைகள் ஐ. தே க. ஆட்சிக்காலத்தில் தான் நடந்தன.

புலிகளுக்கு பாலூட்டி வளர்த்தவர்கள் நீங்கள்தான்.

இன்று புதுக்கதைகள் கூற முனைகின்றீர்கள். எமது அரசாங்கம் பொறுப்புடனேயே செயற்படுகிறது என்று கூறினார்.

கம்பஹா மாவட்ட ஐ தே. க பிரதிநிதி ஜோன் அமரதுங்க பேசுகையில், அரசாங்கம் கிழக்கை இழந்துவிட்டது. இப்போது வடக்கையும் இழந்துவிட்டது. நீங்கள் விடுதலைப் புலிகளுக்கு ''ஈழம்'' கொடுத்துவிட்டீர்கள் என்றார்.

இ. தொ. கா. பதுளை மாவட்ட பிரதிநிதி வி. சென்னன் பேசுகையில், நாம் அரசாங்கத்தை ஆதரித்து வந்தபோதும் தமிழர்களை சந்தேகக் கண்கொண்டு தான் அரசு பார்த்து வருகிறது.

இது தொடர் கதையாகிவிட்டது. குற்றம் அற்றவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

கொழும்பில் உள்ள தமிழர்கள் அவ்வளவு பேரும் பொலிஸ் நிலையம் சென்று கியூவில் நின்று பதிவு செய்ய வேண்டியுள்ளது.

மலையக இளைஞர்கள் ஒரு வருடம், இரண்டு வருடங்களாக புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் தமிழர்கள் என்றால் கிள்ளிக்கீரை என்ற எண்ணமா?

காஷ்மீரிலும் பிரிவினைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீடு என்ற விடுதலை: அதனை அடைய வழி எது?

இன்பத்தை சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப் படுத்தலாம் சிற்றின்பம் தருவது காமம். காமம் என்ற சொல் எல்லா உலக ஆசைகளையும் குறிக்கும் சிறிது பொழுது நிலைத்திராமல் எப்போதும் நிலைத்திருப்பது தான் பேரின்பம் அதுவே மோட்சம்—வீடு—எனப்படும். வீடு என்பதற்கு விடுதலை என்பது தான் பொருள்.

உயிர் உடம்பு என்ற சிறைக்குள் அடைபட்டுக்கிடக்கின்றது. அதில் இருந்து விடுபட்டால்தான் அதற்குமோட்சம் கிடைக்கும் உயிர் உடம்போடு உறவாய் இருக்கும் போது பாவகாரியங்களைச் செய்து கொண்டிருந்தால் உயிரின் சிறைவாழ்க்கை அதிகரிக்கும் மாறாக புண்ணிய காரியங்களை செய்தால்சிறை வாழ்க்கை குறைந்து மோட்சம் கிடைக்கும். வீடு, மோட்சம் அல்லது முத்தி பெறுவதற்கு இதுதான் வழி. எனவேதான் சமயங்கள் புண்ணியச் செயல்களை வலியுறுத்துகின்றன.

வேண்டாம் என்ற நிலையே பேரின்ப நிலையாகும்.

அதற்கு வழி ஐம்புல ஆசைகளை அவித்து பற்றற்றான் பற்றினைப் பற்றுதலேயாகும். இதனையே அருளாளர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். யோகசுவாமிகள் இதனைப் பின்வருமாறு அருளியுள்ளார்.

குருபரன் அடியிணை
ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி
ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக்
காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக்
கூடிடும் இன்பமே

### ஞானக்கதிர்

வேலையாக வெளியே போனாலென்ன, வெளியூர் சென்றாலென்ன நமது வீட்டிற்கு விரையவே மனம் விரும்புகின்றது. ஏன்? அங்கே தான் அமைதி நிம்மதி கிடைக்கின்றது. அன்பும் அமைதியும் இன்பமும் எல்லாம் இணைந்த

**- வாசுகி சிவராமலிங்கம் -**

சிற்றின்பத்திற்கு அவசியமானது பொருள். அதனை நாம் உடம்பால் தேடுகிறோம். பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இதனால் தான் ''செய்க பொருளை'' என வள்ளுவர் ஆணையிட்டுள்ளார். சிற்றின்ப ஆசையை சிறிது பொழுதில் அனுபவித்துத் தீர்த்துவிடலாம். மறுபடியும் இன்பத்தவிப்பு ஏற்படும். ஆனால் அதற்குமேல் ஒன்றும் இடம் வீடேயாகும். இதே போன்று உயிர் மானிடச் சட்டையை உதறி விட்டு உயிர் நாயகனான இறைவனை அடைந்தால் தான் அதற்கு வீடு — பேரின்பம் — கிட்டும். அதற்கு நாம் வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனே ஏத்தி, ஏத்தி இன்ப நிலை எய்துவோமாக.

★

## மலாயன் ஓய்வூதியர் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 9

மலேஷியா ஓய்வூதியர்களின் ஜுலை மாத வவுச்சர்களும், காசோலைகளும் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று செயலக ஓய்வூதியக்கிளை கணக்காளர் திரு க. வீரசிங்கம் தெரிவித்தார்.

## அரச அதிகாரிகள் கை விரிக்கலாமா?

உதயன் 03-08-96 ஆம் திகதி வாசகர் திருமுகம் பகுதியில் ஓய்வூதியத் தாமதம் குறித்து அரசாங்க அதிபர் சார்பாகக் கணக்காளர் (ஓய்வூதியம்) விளக்கம் அளித்திருந்தார். அவ்விளக்கம் தொடர்பாக எழுதுவது:-

★ கொழும்பில் நிலவும் மின் தடைதான் ஓய்வூதியத் தாமதத்துக்கான காரணங்களுள் ஒன்று என்று கணக்காளர் விளக்கம் தந்துள்ளார். அரச திணைக்களங்களின் கடமைகளைப் பாதிக்கும் வகையில் கொழும்பு நகரில் மின்வெட்டு அமுலில் இருக்கவில்லை என்பது கவனத்துக்குரியது. அது போக, அதிக வேலைப் பளு உள்ள திணைக்களங்களில் மேலதிக நேர வேலைகளைக் கவனிப்பதற்காக மின்பிறப்பாக்கிகள் பாவனையில் உள்ளன குறிப்பாகக் கணனிச் செயற்பாடுகளைக் கொண்ட ஓய்வூதியத் திணைக் களத்திலும், அதனைச்சார்ந்த கிளைகளிலும்மின்தடைநேரங்களிலும் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. மற்றும்படி. ஓய்வூதிய வவுச்சர்கள் தயாரிப்பது ஒரிரு நாள் வேலை அல்ல — (கணக்காளர் சுட்டுவது போல) மின்தடை என்றாலும் திட்டமிட்டு ஒரு மாத காலத்துக்குள் வவுச்சர்களைத் தயாரிக்கலாமே;

★ அடுத்து கப்பல், சிவிலியன் விமானம், கடிதப் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருப்பது ஓய்வூதிய வவுச்சர் தாமதத்துக்கான காரணம் என்கிறார். அப்படியாயின் ஜூன் மாதம் கப்பல், சிவிலியன் விமானம், கடிதப் போக்குவரத்து நடைபெற்ற போது அந்த மாத வவுச்சர் ஜுலை மாதம் நடுப்பகுதியில் வரக் காரணம் என்ன?

### வாசகர் திருமுகம்

★ ஓய்வூதியத் தாமதத்துக்கு கிளாலிப் போக்குவரத்துத் தடையையும் சாட்டாகக் கணக்காளர் கூறுகின்றார். தடை என்பது உண்மைதான்; ஆனால் யாழ்.செயலகத்தைச் சேர்ந்த பதவி நிலை அதிகாரிகள் எந்த வழியால் கொழும்பு செல்கிறார்கள்? (அவர்கள் மேற்கொள்ளும் தனிப்பட்ட பயணங்கள் அல்ல) அதே வழியை ஓய்வூதிய வவுச்சர் விஷயத்திலும் கையாண்டால் என்ன?

★ மீளக்குடியேறிய மக்கள் தங்கள் சொந்த வதிவிடங்களில் இல்லாதபோது எந்த வித முன்னறிவித்தலும் இன்றி ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டன. அதனால் ஓய்வூதியர்கள் கடற்கரைத் தாளங்காய் போல் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு?

ஓய்வூதியத் தாமதத்துக்குத் தாமோ, யாழ். செயலகமோ பொறுப்பில்லை என்று பொறுப்பற்ற முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கையை விரிக்கக் கூடாது. ஓய்வூதிய வவுச்சர்களை உரிய காலத்தில் பெறுவதற்கு வேறு மாற்று வழிகள் இல்லையா? ஓய்வூதிய வவுச்சர்களில் எவரும் அக்கறை இல்லை என்பதுதான் உண்மை. சும்மா இருப்பது சுகம் தரும் என்று சிலர் இருக்கிறார்கள். காவோலை விழக் குருத்தோலை சிரிப்பது தர்மமாகாது

எஸ். சுந்தரம்,
யாழ்ப்பாணம். தி. செல்வம்.

## மாற்று வழி உண்டு

சென்ற வருடத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஓய்வூதியருக்கு அந்தந்த மாதமே செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு, ஓரிரு மாதங்கள் கொடுப்பனவுகளும் செய்யப்பட்டு வந்தன. ஆனால் போர்க்காலச் சூழ்நிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் இம்முறை தடைப்பட்டது அநேகமாக இதற்கு முக்கிய காரணங்களிலொன்று போக்குவரத்துச் சீரின்மையே.

எனினும் தாமதங்களைக் குறைக்கும் பொருட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை, குறிக்கப்பட்ட மாதத்தோடு மறு மாதத்தினதும், ஆக இரு மாதங்களுக்குத் தயாரித்து, கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டன. குறிக்கப்பட்ட மாத ஓய்வூதியத்தை வழங்கி மறு மாதத்துக்குரியதை வைத்து வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதற்கான கட்டு நிதிகளும் அந்தந்த மாதங்களில் பெறப்பட்டது. இம்முறையினைக் கையாண்டதால் ஓய்வூதியம் தாமதமில்லாமற் கிடைப்பதற்கு ஒரு மார்க்கமாகவிருந்தது.

இந்த வழிமுறை சென்ற வருடம் ஓரிரு மாதங்களால் கைவிடப்பட்டது. அரச சேவையிலுள்ள சேவையினர்களுக்கு வழங்கப்படும் ஊதியங்கள் தாமதமாகும் பொழுது முற்பணமோ அல்லது கடனோ, அவர்கள் சேவையிலிருக்கும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு வசதிகள், சலுகைகள் உள்ளன ஆனால் ஓய்வூதியம் பெறுவோருக்கு இவ்வாறான வசதிகளோ, அல்லது சலுகைகளோ ஏதுமில்லை.

எனவே இன்றைய கஷ்ட நிலையினைக் கருத்தில் கொண்டு தாமதங்களைக் களைந்து உரிய மாத ஓய்வூதியத்தை அந்த மாத இறுதிக்குள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு மிகவும் தயவாக யாழ். அரச அதிபரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கொக்குவில் கிழக்கு. செ .டஞ்சாட்சரம்

*யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் உண்டாகும் தாமதம் குறித்து யாழ். செயலகக் கணக்காளர் (ஓய்வூதியம்) அளித்த விளக்கம் இம்மாதம் மூன்றாம் திகதிய உதயனில் பிரசுரிக்கப்பட்டது. அந்த விளக்கம் குறித்து அதிருப்தி தெரிவித்து வாசகர்கள் பலரும் கருத்துக்களை எழுதியுள்ளார்கள். அவற்றில் இரண்டை மட்டும் இங்கு வெளியிடுகின்றோம். (ஆ - ர்)*

# மருதானை ரயில் நிலைய தேடுதலில் 8 தமிழர் கைது

கொழும்பு, ஓக. 9

மருதானை ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் 8 தமிழர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் பெண்களாவர்.

மருதானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐவன் குணரத்தினாவின் கண்காணிப்பின் கீழ் மருதானை ரயில் நிலையத்தில் இயங்கி வரும் தேடுதல் பிரிவுப் பொலீஸார் இத்தேடுதலில் ஈடுபட்டனர்.

சுமார் 5 ஆயிரம் பயணிகளை சோதனைக்கு உட்படுத்தியபோது இந்த 8 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று ஐவன் குணரத்தின தெரிவித்தார். (இ-3)

## சூடுபட்டு காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்பிராந்தியத்தில் கடற்தொழிலுக்கு சென்றவேளை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் நேற்று அங்கு மரணமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச்சூட்டுக்கிலக்கான, ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த குமாரலிங்கம் குலசிங்கம் (வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவருக்கு திருமணமாகி ஒரு மாதமும் நிறைவடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## 30 அதிகப்படி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்களும் வாக்களித்தார்கள்.

விவாதத்தை முடித்து வைத்துப்பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதியின் சார்பில் தாம் உறுதிமொழி அளிப்பதாகக் கூறினார்.

## உண்மை நிலையை..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடக்கின்றது. அங்கு எல்லா முஸ்லிம்களும் சிறையில் அடைக்கப்படுகின்றார்களா?

இந்தியா ஒரு முஸ்லிமை ஜனாதிபதியாகக் கொண்டு செயற்படவில்லையா?

எமது மலையக மக்கள் கதிர்காமம் சென்று வழிபாடுகளில் ஈடுபடக்கூட முடிவதில்லை.

நிலைமை இவ்வாறு நீடிக்குமாயின் அவசர காலநிலை நீடிப்புக்கு நாம் ஏன் ஆதரவு வழங்கவேண்டும என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை உருவாகும் — என்றார்.

ஐ. தே. க. பிரதிநிதி ஜயலத் ஜெயவர்த்தனா, பேசுகையில் முல்லைத்திவு 1970 இல் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு முகாம் ஆகும்.

இது இன்று அழிக்கப்பட்டுவிட்டது. ஆயுதங்களை புலிகள் கொண்டு சென்றுள்ளனர். பாதுகாப்புப் படையினர் பலர் இறந்துவிட்டார்கள் — என்றார்.

ஐ, தே. க. பிரதிநிதி சரத் அமுனுகம பேசுகையில், முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்த படையினருக்கு நடந்தது எது எனக் கேட்டால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அதற்கு உறுதியான பதில் தராமல் இருப்பது ஏன்? பாதுகாப்பு காரணம் என்று கூறுவது ஏன்? என்று கேட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம். பி செல்வராசா பேசுகையில், எத்தனை பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டார்கள், எத்தனை புலிகள் கொல்லப்பட்டார்கள் என்று கணக்குப் போடும் வேளையில் அரசும், எதிர்க்கட்சியும் ஈடுபடுகின்றனவே தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வில் கவனம் காட்டுவதாக இல்லை. என்றார்.

யுத்தத்தினால் பாதுகாப்புப் படையினர் இறந்தாலும் புலிகள் இறந்தாலும். அவர்கள் இந்நாட்டவர்களே.

இனப்பிரச்சினை தீர்வுக்கு பேச்சுவார்த்தைகளே ஒரே வழியாகும். புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தைக் காண முன் வாருங்கள் என்றார். (இ 3)



யாழ்ப்பாணம், ஓக. 9

வில்லூன்றி தேவஸ்தானத்தின் தீர்த்தோற்சவமும் ஆடி அமாவாசை விழாவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் பழைய நேரப்படி காலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் தீர்த்தோற்சவத்தில் 8-15மணிக்கு விநாயகப் பெருமான் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி கொண்டருளியதன் பின் பொதுமக்கள் அமாவாசைத் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை புனித தீர்த்தக் கரை சிவராமலிங்கேஸ்வரர் ஆலய பூமியில் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வார்.

புனித தீர்த்த இளைப்பாறு மண்டபத்தில் தமிழோடு இசைபாடல் நிகழ்ச்சி நடைபெறும்.

பண்ணிசைப்புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம், தேவார இசைமணி இரா. திருஞானசம்பந்தன் ஆகியோர் இந்நிகழ்வில் இசை விருந்தளிப்பர். (அ-4)

★ ★ ★

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு, நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு இப்போது நடைபெறுகிறது.

நாளாந்தம் பி ப. 3 மணி முதல் 5 மணி வரை ஆதீன புராண சபையினர் புராண படனத்தை நடத்தி வருகிறார்கள். (அ)

★ ★ ★

சில்லாலை கதிரை மாதா திருநாள் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 15 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொரூபபவனி ஆகியவற்றுடன் திருநாள் பூர்த்தியாகும், (இ-3)

# யுத்தத்தில் அரசாங்கம் வெல்லும் என்பது தவறான நிலைப்பாடு

## தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 9

''போரில் அரசாங்கம் வெற்றிபெற முடியும் என்பதெல்லாம் தவறான நிலைப்பாடாகும்''

அமைச்சரும், இ. தொ. கா தலைவருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

தமிழரோ, சிங்களவரோ எவராயினும் இலங்கை மக்களே. போரினால் ஆயிரக்கணக்கில் உயிர்கள் பலியாகின்றன. இதனைத் தடுக்கு முகமாக இருதரப்பினரும் உடனடியாக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புலிகளை அடக்கிவிட்டதாகவும், யாழ்ப்பாணத்தைப் பிடித்துக் கொடி ஏற்றி விட்டதாகவும் அரசாங்கம் கூறியிருந்தது.

ஆனால் அதன் பின்னர் முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது போரில் அரசாங்கம் நிரந்தர வெற்றியைப் பெற முடியாது என்பதையும் போரின் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதையும் தெளிவாக விளக்குகின்றது என்றும் அவர் கூறினார். [இ-3]

# நீதிமன்றப் பாதுகாவலில் இருந்த நகைகள், ஆயுதங்கள் திருட்டு

## வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவை

கொழும்பு, ஓக. 9

கொழும்பு உயர் நீதிமன்ற பதிவறையிலும் களஞ்சியத்திலும் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளும் ஆயுதங்களும் இனந்தெரியாதோரால் திருடப்பட்டு விட்டதாக உயர் நீதி மன்றப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நகைகளும் ஆயுதங்களும் வடக்கு - கிழக்கிலுள்ள நீதிவான் நீதி மன்றங்களினால் பாதுகாப்பாக வைப்பதற்காக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன எனவும் —

பின்னர் உயர் நீதி மன்றத்தின் உத்தரவையடுத்து இப்பொருள்கள் உயர் நீதிமன்ற சான்றுப்பொருள்களின் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலீஸார், இப்பொருள்களுக்குப் பொறுப்பாக இருந்த உயர் நீதி மன்ற ஊழியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து தலைமறைவாகிவிட்டார் எனத் தெரிவித்தனர். (இ-10)

# வலிகாமம் மேற்கு, தெற்கு பகுதிகளில் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் ஆக. 9

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்குப் பகுதிகளில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. கிடைக்கும் பொருள்களும் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

மீன், மரக்கறி என சகல உணவுப் பொருள்களையும் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது.

உள்ளூர் வியாபாரிகள் யாழ் நகருக்குள் வந்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருப்பதே இந்த உச்ச விலைக்கும், பொருள் தட்டுப்பாட்டுக்கும் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி வியாபாரிகளும் மக்களும், தற்பொழுது உள் வந்து செல்ல அனுமதி மறுக்கப்படுவதால் பொருள்களை வாங்க அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் உதவியை நாடி வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கே உள்ளே வந்து செல்ல தற்போது அனுமதி வழங்கப்படுகிறது. [இ-15]

## கரடிப்போக்குச்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளத்திலும் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கென புலிகளால் நடத்தப்பட்டு வந்த ஒரு நிலையத்தின் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவ்வாறு பிரிகேடியர் முனசிங்க மேலும் தெரிவித்தார். (உ– 3-5)

## பலர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கடந்துவிட்டபோதிலும் மக்கள் எந்தப் பகுதிகளுக்குச் சென்று புகலிடம் தேடியுள்ளார்கள் என்பது குறித்துச் சரியான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இடம்பெயரும் அகதிகளில் பெரும் பகுதியினர் வவுனியாவுக்கு வருவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

மடுவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இரண்டு பெரிய அகதி முகாம்கள் உள்ளன. அங்கு கூட மிகக்குறைந்த எண்ணிக்கையான மக்களே வந்துள்ளனர்.

விமானக் குண்டு வீச்சுக்குப் பயந்தும், விடுதலைப் புலிகள் தெற்கே வருவதைத் தடுப்பதாலும் என்ற இரு காரணங்களாலும் அகதிகள் பலர் காடுகளில் சிக்குண்டிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது

மக்கள் எந்தப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள் என்பது தெரிந்த பின்பு தான் தொண்டர் நிறுவனங்கள் தமது நிவாரணப் பணிகளைத் தொடங்க முடியும்—

அகதிகளுக்கான பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த பிரதிநிதி திரு. மல்கம் ஹோரயேர்ஸ் பி. பி. ஸிக்கு நேற்றிரவு அளித்த பேட்டி ஒன்றில் இத்தகவல்களைத் தெரிவித்தார். (அ)

# வலி – கிழக்கு பிரிவில் புதிய பங்கீட்டு அட்டை

யாழ்ப்பாணம், ஓக. 9

வலி-கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உணவுப்பங்கீட்டு அட்டைகளைப் புதிதாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வடமராட்சிப்பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்தபோது வழங்கப்பட்ட அட்டைகளே தொடர்ந்தும் தற்போது இப்பகுதியில் பாவனையில் இருந்து வருகின்றன.

இவற்றை ரத்துச்செய்துவிட்டு புதிதாக பங்கீட்டு அட்டைகளை வழங்குவதற்கு பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

எனவே வலி-கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தற்போது தங்கியிருக்கும் சகல குடும்பங்களும் தற்போது தாம் வைத்திருக்கும் பங்கீட்டு அட்டைகளுடன், தாம் வசிக்கும் பகுதியின் கிராம உத்தியோகத்தர்களைச் சந்தித்து புதிய அட்டைகளைப் பெறுவதற்கு தேவையான விபரங்களை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.

பங்கீட்டு அட்டை வழங்கும் வேலை காலந்தாழ்த்தாது நிறைவேற்றப்பட வேண்டுமாதலால் 15ஆம் திகதிக்கு முன் கிராம உத்தியோகத்தர்களைச் சந்தித்து விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி கோப்பாய் பிரதேச செயலகம் கோரி உள்ளது. (இ)

## பரணந்துறையில் 5 தமிழர் கைது

கொழும்பு, ஓக. 9

பாணந்துறை பொலீஸார் சந்தேகத்தின் பேரில் ஐந்து தமிழர்களைக் கைதுசெய்துள்ளனர்.

ஐந்து தமிழர்களும் மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சுண்ணாம்பு லொறியில் பயணம் செய்துகொண்டிருந்ததாகவும் —

பின்வத்தை என்னும் இடத்தில் லொறி நின்றசமயம் சந்தேகம் கொண்ட பொதுமக்கள் சிலர் இந்த ஐவரையும் பிடித்துப் பொலீஸில் ஒப்படைத்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## காயம்

யாழ்ப்பாணம், ஓக. 9

எதிர்பாராத விதமாகச் சாய்ந்து விழுந்த பப்பாசி மரத்தின் கீழ் அகப்பட்ட மூன்று வயதுக் குழந்தை ஒன்று படுகாயமடைந்தது.

மீசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பகீரதன் (வயது 3) என்ற ஆண்குழந்தையே காயமடைந்த குழந்தை ஆகும்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

மரண அறிவித்தல் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 09-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.